டு சந்தா ரூ. 7. தனிப் பிரதி அணா 2. சிலோன் 15 சதம் REGD. NO 4642

திராவிடநாடு

மலர் 11. 15—3—53 இதழ் 37

கள்ளனுக்குக் கன்னக்கோல் பரிசு!

கள்ளன் பிடிபட்டான் — காரி உமிழ்ந்தனர் மக்கள்—இனி இவன் கொட்டம் அடங்கும் — ஊராரின் உடைமைக்குப் பயம் இல்லை—தூக்க மின்றித் தவித்திடத் தேவையில்லை —கள்ளன் பிடிபட்டான்!

சிறையிலே தள்ளிவிட்டனர் கள்ளனை, ஊரார் உள்ளம் குளிர்ந்தது—கள்ளனைப் பிடித்துக் கொட்டடியில் தள்ளிப் பூட்டிய திறத்தையும் நியாயத்தையும் மக்கள் பாராட்டினர்.

கள்ளன் திரட்டிவைத்திருந்த பணக் குவியலைப் பறிமுதல் செய்தனர். முறை இதுதான் — அக்ரமத்தால் சேர்த்த செல்வம்—பிறர் அழ அழப் பறித்துக்கொண்ட பணம்—கள்ளனிடம், வெள்ளை உள்ளத்தினர் கொள்ளைகொடுத்தபொருள், எனவே அந்தப் பொருளைக் கள்ளனிடமிருந்து பறிமுதல் செய்தது நியாயமே என்று நேர்மையாளர்கள் பாராட்டினர்.

கள்ளன் பிடிபட்டான், சிறையில் அடைக்கப்பட்டான் — களவாடிக் குவித்த பொருளும் பறிமுதல் செய்யப்பட்டுவிட்டது.

இது சரியான பாடம்! என்றனர் அனைவரும். நாட்கள் சில உருண்டோடின. கள்ளன் விடுதலை பெற்றான்! குற்றமற்றவன் என்று ஆதாரம் கிடைத்து அல்ல! அவன் சிறையில் இருந்தது போதும் என்று, அவனைச் சிறைமீட்டோர் கருதினர்! இதென்ன அனியாயம்—கள்ளனிடம் கருணை காட்டவேண்டிய காரணம் என்ன? என்று மக்கள் திகைத்தனர். கள்ளன் புன்னகை புரிந்தான்!

கள்ளன் சிறையிலிருந்து விடுதலை பெற்றது மட்டுமா! அவனுக்கு அழகிய கன்னக்கோல் பரிசளிக்கப்பட்டது!!

இது என்ன விந்தை! ஏன் இப்படி ஒரு கட்டுக்கதை? கருத்தில் தெளிவில்லாதவனும் கூட அல்லவா இதைக் கேட்டால் கைகொட்டிச் சிரிப்பான்! பிடிபட்ட கள்ளனைப் பிடரியில அடிப்பர், காரி உமிழ்வர், கைகால்களில் விலங்கிடுவர், கடுஞ் சிறையில் தள்ளுவர்—எங்கும். கள்ளனுக்குக் கன்னக்கோல் பரிசளித்த அபோதிபுரம், எங்கே இருக்கிறது! எங்கே இருக்கமுடியும்? என்று யான் எவரும் கேட்பர்.

கள்ளனுக்குக் கன்னக்கோல் பரிசும், கொலைகாரனுக்குக் கொடுவாள் பரிசும், தந்தால், எவ்வளவு விந்தை ...ந்த மடைமையோ, அதைவிட விந்தையும் மடைமையும் மிகுந்த காரியத்தை, நாகரீகத்துக்கு நடுநாயகமென்றும், 'ஜனநாயகக் கோட்டை'யென்றும்; பெருமை பேசிக் கொள்ளும் நாட்டினர், செய்துள்ளனர்—இப்போது.

கள்ளன் பிறர் பொருளை அவர் கள் அயர்ந்திருக்கும் வேளையில் வருகிறான்.

கொலைகாரனும், இருட்டிலே வரும் காணநேரத்தில், தலையைச் சீவுவான்—உயிர் குடிப்பான்.

கள்ளன் — கொலைகாரன் இருவருமே, தமது செய்கையை எவரேனும் கண்டுவிட்டால், தமக்கு ஆபத்து நிச்சயம் ஏற்படும் என்ற அச்சம் கொண்டவர்கள்.

ஆனால், கடந்த உலகப் போரின் போது, உலகினர் விழித்திருக்கும் போதே, எவரும் அறியும்வண்ணம், ஏழையின் பொருளைக் கவர்ந்தும், ஏமாளிகளின் உயிரைக் குடித்தும் கொழுத்துக்கொண்டிருந்த ஒரு கொலைகாரக் கும்பல். க்ரூப் — எனும் பெயர்படைத்த கம்பெனி, ஜெர்மன் போர்வெறியர்களுக்கு வித விதமான போர்க் கருவிகளைத் தயாரித்துக் கொடுத்தது. உலகத்தைத் தன் உருட்டுவிழியால் சுட்டுச்சாம்பலாக்கிவிடத் துணிந்து முனைந்த இட்லருக்கு, க்ரூப் தொழிற்சாலை தான், பக்கபலம். ஜெர்மனியிலும் வேறு நாடுகளிலும், க்ரூப்தயாரித்த அழிவுக்கருவிகள், மலை மலையாகக் குவிந்திருந்த கருவிகள், ஒன்றுக்குப் பத்து மடங்கு விலையில் வேக வேகமாக விற்கப்பட்டன. போர்க் கருவிகளைச் செய்து குவித்து வைத்திருந்த க்ரூப், போர்வெறியை ஜெர்மனி கொள்வதற்குத்தூபமிட்டான் —தூபமிட்டால்தானே, கொள்ளை இலாபத்துக்குப் போர்க் கருவிகளை விற்கமுடியும்! ஜெர்மனியில், பிரம்மாண்டமான தொழிற்சாலை, க்ரூப் கம்பெனி. நிலக்கரிச்சுரங்கங்களும், இரும்புத் தொழிற்சாலைகளும், ஓய்வின்றி வேலை செய்தவண்ணம்இருந்தன — க்ரூப், கோடி கோடியாகப் பணம் குவித்துக்கொண்டான் — அரசுகளை ஆட்டிப்படைக்கும் அளவுக்குச் செல்வாக்கும் பெற்றான். க்ரூப் பேழையிலே பணம் குவியும், களத்திலே, ஏழையின் இரத்தம் ஆறெனப்பாயும்! க்ரூப் கம்பெனியில் இலாபத் தொகை வளரும் — பல்வேறு களங்களிலேயும் பிணவரிசைகள் பெருகும்! பிணக் குவியல் அதிகமாக அதிகமாக இலாபம் வளரும்—எனவே க்ரூப், போர் வெறி குறையாதபடி, தூபமிட்டபடி, இருந்தான். இது அனைவருக்கும் அறிவிக்கப்பட்ட செய்திதான் —யாராலும் அடக்கமுடியவில்லை— எனினும் க்ரூப், பிணத்தைக் குவித்துப்பணம் திரட்டுகிறான்—டேய்ன்-பெர்லின் வெறியனுக்கு இவன் துணை நிற்கிறான்—மக்களின் முதல் நம்பர் விரோதி இவன் — என்று நேர்மையாளர் அனைவரும் கூறினர் —கண்டித்தனர்.

பெர்லின் வீழ்ந்தது. பேயரசு சாய்ந்தது. போர் வெறியர்களைப் பிடித்துக் கூண்டிலேற்றினர்—இட்லரின் சகாக்களின்; சிரம் வெட்டப்பட்டன! போர்வெறியைத் தூண்டிய பாதகர்கள். களத்திலேகாதகச் செயல் புரிந்தவர்கள், கைதான மக்களைக் கொன்று குவித்த கொலை பாதகர்கள், மக்களைச சித்திரவதை செய்த காட்டுமிராண்டிகள், ஆகியோருக்கெல்லாம் மரண தண்டனை, ஆயுள்தண்டனை, சொத்து பறிமுதல்—எனப் பல்வேறு வகையான தண்டனைகள் விதிக்கப்பட்டன. இனி ஒருமுறை எவனும் துணிந்து போர்வெறியை மூட்டிவிட முன்வரக்கூடாது, என்பதற்காகவே இந்தத் தண்டனைகள் தரப்பட்டன — நியாயமான நடவடிக்கை,என்று உலகமும் கூறிற்று.

அப்படி, பிடிபட்டு, கூண்டிலே நிறுத்தப் பட்டவர்களில், க்ரூப் ஒருவன். நடைபெற்ற பயங்கரப் போருக்கும், போரிலே புரண்டோடிய இரத்தவெள்ளத்துக்கும், க்ரூப்பின் இலாப வேட்டைக்குணம் மிக மிகத் தூண்டுகோலாக இருந்தது. உலகப் போரிலே, எண்ணற்ற இளைஞர்களின் உயிரைக் குடித்த க்ரூப், தண்டிக்கப்பட வேண்டியவனே, என்று, அமெரிக்க ராணுவ நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்.

பனிரண்டாண்டு சிறைவாசம், கொலைகாரக் க்ரூப்புக்கு.

க்ரூப் சேர்த்து வைத்திருந்த பொருள் அவ்வளவும் பறிமுதல் செய்யப்படவேண்டும்.

இது 1947-ம் ஆண்டு அமெரிக்க ஆட்சியாளர்கள் அளித்த தீர்ப்பு.

போர்வெறியைக் களைந்தெறியவும், போர் மூட்டிவிட்டு இலாப வேட்டைஆட எண்ணும் அக்ரமக்காரர்களை அழித்தொழிக்கவும், இத்தத் தீர்ப்பு தக்கதோர் வழிவூட்டும் என்று பலரும் களித்தனர்.

அமெரிக்கா, போர்வெறிக்கும் வெறியர்களுக்கும் மறக்க முடியாத பாடத்தைக் கற்றுக் கொடுக்கிறது— மனிதகுலத்தின் மாண்புக்காக, நீதியை நிலைநாட்டுகிறது என்று பலரும் பாராட்டினர்.

மூன்றாண்டுகள் உருண்டோடின!

ஜெர்மனியில், ஒரு பகுதியில் செஞ்சேனையின் ஆட்சி. மறுபகுதியில் அமெரிக்க முகாம்?

க்ரூப் தண்டிக்கப்பட்டது அமெரிக்க முகாமில்—சிறையும் அங்குதான்.

மூன்றாண்டுகள் சென்றன—அமெரிக்க ஆட்சியாளர், பனிரண்டு ஆண்டு சிறையில்கிடக்க வேண்டிய பாதகனை, விடுதலை செய்து விட்டனர்! ஏன்? நீரவிசாரித்துப் பார்த்ததில், க்ரூப் குற்றமற்றவன் என்று தெரிவதாலா — இல்லை — இல்லை! இனம் இனத்தோடு சேரும் என்ற முறையில்!

க்ரூப், பாட்டாளி மக்களை, பாமர மக்களை, போரிலே ஈடுபட்ட மக்களைத்தானே பிணமாக்கினான்! இலட்சாதிகாரிகளையும் கோடீஸ்வரர்களையும் சோப்புச் சீமானையும், எண்ணெ அரசனையும், இன்னும் இதுபோன்ற பணம் படைத்த பூமான்களையா பிணமாக்கினான்? இல்லையல்லவா? எனவே, பண வெறியர்களின் பாதுகாப்பு அரணாக அமைந்திருக்கும் அமெரிக்கா, இந்த அநீதியை, வெட்கமின்றி பயமின்றி, செய்யத் துணிந்துவிட்டது. கொலைகாரக்ரூப்புக்குப் பரிவு காட்டுகிறது! அவன்-மேனி வாடலாமா, நெஞ்சம் பதறலாமா, சிங்கார மாளிகையிலே கொலுவீற்றிருக்க வேண்டிய கோமான், சிறையிலே உழல்வதா, அதை இந்தக் கண்களால் காண்பதா, செச்சே! என்ன அனியாயம், எவ்வளவு அக்ரமம்! மலை மலையாகப் பொன் குவித்திருக்கும் சீமான், அவனையா, 'கப்பரையும் கையுமா'கச் சிறையிலே இருக்கச் சொல்வது, இது அவனுக்குமட்டுமா, பணக்காரச் சமூகத்துக்கே செய்யப்படும் அநீதியல்லவா என்றெல்லாம் எண்ணினர்போலும், ஜனநாயகம் பேசி உலகை ஏய்க்கப் பார்க்கும் அமெரிக்க ஆட்சியாளர்களால் க்ரூப் விடுதலை செய்யப்பட்டான்! போர் வெறியன் வெளியே உலவுகிறான்— நீதியும் நியாயமும், சட்டமும் ஜனநாயகத் திட்டமும் என்முன் என்ன செய்யமுடியுமென்று அவனுடைய புன்னகை கேட்கிறது! இட்லர் செத்துவிட்டால், என்போன்றுருக்குத் துணை கிடையாது என்று எண்ணினீர்களே, ஏமாளிகளே, என் தோழர்கள், சீமான்கள், இலாப வேட்டைக்காரர்கள், அமெரிக்க ஆட்சியாளர்கள் இருக்கிறார்கள் கண்டீர்களா? என்று க்ரூப் கேட்டுக் காரித் துப்புகிறான்.

க்ரூப் விடுதலை செய்யப்பட்டது மட்டுமா? கள்ளனுக்குக் கன்னக் கோல் பரிசளிக்கப்படுகிறது.

பனிரெண்டாண்டு சிறையுடன், சொத்துப் பறிமுதலும் சேர்த்தல்லவா, தண்டனை.

சிறையிலிருந்து வெளியே அனுப்பப்பட்டாலும், க்ரூப், பல் பிடுங்கப்பட்ட பாம்புபோல, குவித்துவைத்திருந்த செல்வத்தை இழந்துவிட்டுத்தானே உலவவேண்டும், சொத்து பறிமுதல் செய்யப்பட்டு விட்டதே, என்று எண்ணுகிறீர்களா? ஆமாம், யாரும் அப்படித்தான் எண்ணுவார்கள். ஆனால், அமெரிக்க நீதி, சாமான்யமானதா!!

சொத்து பறிமுதல் என்ற தண்டனையையும் ரத்து செய்துவிட்டனர்!

க்ரூப் பழையபடி சீமான்!! அவன் 'சம்பாதித்த' செல்வம் சிந்தாமல் சிதையாமல் அவனிடம்!! எப்படி இது சாத்யமாகும்? அவனைச் சிறையிலே தள்ளும்போதே, சொத்து பறிமுதல் செய்யப்பட்டிருக்குமே, என்று கேட்கிறீர்களா? நீங்கள் சாமான்யர்கள்தானே! அப்படித்தான் கேட்பீர்கள். விவகாரத்தைக் கவனித்தவர்கள், அமெரிக்கர்கள், கவனமிருக்கட்டும், ஆபிரகாம் லிங்கன்மீது ஆணையிட்டுக்கொண்டே அக்ரமத்தைச் செய்யும் அறிவாற்றல் படைத்தவர்கள்!!

க்ரூப் சொத்து பறிமுதல் செய்யப்படவேண்டும் என்று தண்டனை-ஆனால், அது ஏட்டிலே எழுதப்பட்டதோடு, சரி, அமுலுக்குக் கொண்டுவரவில்லை. மூன்றாண்டுகள் சிறையிலிருந்தான் க்ரூப்-எனினும்

(6-ம் பக்கம் பார்க்க)

திராவிடநாடு

காஞ்சி] 15—3—53 [ஞாயிறு

'மாஸ்கோ'வின் புது ஒளி!

★

"கட்சித்தோழர்களிடம் சரிவரப் பழகு!—அன்புள்ளத்தோடு, நடந்துகொள். அவர்கள் காட்டும் மரியாதையை, அவர்களுக்கும் திருப்பிச் செய். தவறினால், கண்டிக்கச் செய்! ஆர்வத்தோடு உழைத்தால் பாராட்டத்தவறாதே!!"

"தலைமை நிலையத்திலிருக்கிறாய். நாட்டின், ஒவ்வொரு மூலையிலிருக்கிற கட்சிக் கூடாரங்களின், இருதயம், நீ. எங்கெங்கு, என்னென்ன, நடக்கிறது என்பதைக் குறிப்பாக, மனதில் படம் பிடித்துக்கொள்..."

"எடுத்த காரியத்தை, நிறைவேற்று. கட்சிக்காக உன் வாழ்வை அர்ப்பணித்து விட்டாய்! இனி, உன்வாழ்க்கை, பொது மக்களிடம் தான் கழியப்போகிறது. அதை மறந்துவிடாதே. கட்டுப்பாடு! விடாமுயற்சி! எப்போதும் வேலை செய்! ஓய்வுக்காக ஏங்காதே!!"

"யார், உன்னை நேசிக்கிறார்கள்—எவர் உன்னை தூஷிக்கிறார்கள், என்பதைத் தெரிந்துகொள். ஆனால், இருவரிடமும், உனக்குள்ள பொறுப்பையுணர்ந்து, நடந்துகொள். பகைமை காட்டுவதும், பாசம் அதிகமாகச் சிலரிடம் காட்டுவதும், கட்சிக்குள் ஆபத்து"

"திடீரென்று, பலர், உன்னைப் போற்றி விட மாட்டார்கள்! நீ கட்சிக்காகச் செய்யும் சேவையைப் பொறுத்துத்தான், உன் புகழும் வளர்ச்சியும் இருக்கிறது."

*

மாலெங்கோவ்! — ஸ்டாலின் இடத்தை நிரப்ப யாரிருக்கிறார்கள்? என்ற கேள்வி, ஒவ்வோர் இதயத்திலும் துடித்துக் கிடந்த போது, தெரியாத பெயர். ஆனால், இன்று மாவீரரின் இடத்தில், அமர்ந்திருக்கிறார். இருபது கோடி மக்களின், தலைவனாக! உலகிலுள்ள ஒரு 'கூடாரத்தின்' அதிபதியாக!!

இவரது வாழ்க்கையை அறிந்தோருக்கு, தலைப்பிலே தரப்பட்ட, அறிவுரைகளின் முக்கியத்துவம் தெரியும்.

துள்ளித் திரிகின்ற பருவம் தாண்டி — வாலிபப் பருவத்தைக் கழித்து—வயோதிகப் பருவத்தில் நுழைந்து கொண்டிருக்கும், மாலெங்கோவின் வாழ்க்கை வரலாறு,பலருக்குத் தெரியாது. ஆனால் அவர், ஸ்டாலின் இடத்தை நிரப்பக்கூடிய அளவுக்கு, எவ்விதம் வளர்ந்தாரென்பது தெரியும்.

மேலே சொன்ன, வார்த்தைகள் தான், மாலெங்கோவ் அவர்களின், தாரக மந்திரங்கள்.

பணத்தை அள்ளிவீசி, படாடோபத்தைக் காட்டி, ஓட்டுகளைப் பெற்று, அதனால் உயர்ந்த 'தலைவர்களாய்' வரக்கூடிய வசதி, ஜனநாயகம் பேசும், நாடுகளில் உண்டு. இன்ஷியூரன்ஸ் கம்பெனி நடத்துபவனும், பத்திரிகைத் தோட்டத்தால் பணம் குவிப்பவனும், பாங்கி வைத்து நடத்துபவனும், ஆலை அரசனும், மிலப்பிரபுவும், தலைவர்களாக வந்துவிடலாம்—ஆட்சியின் 'லகானை'ப் பிடிக்கும், வாய்ப்பைப் பெறலாம், முதலாளித்துவ நாடுகளில். உறுப்பினர்களின் ஓட்டுச் சீட்டுகளை வேட்டையாடி, தலைவனாவோரும், மேடை அதிரச் செய்யும் பழக்கத்தைக் காட்டி கட்சிமூலம் எம். எல். சி. ஆவோரும், இங்கெல்லாம், இருப்பது போன்ற, நாடு அல்ல ரஷ்யா.

யார், கட்சிக்காக உழைத்தானோ—உழைப்பதையும் உருவான காரியங்களைச் செய்வதற்காகப் பயன்படுத்தினானோ—அவன்தான், தலைவனாக வரமுடியும். பாராட்டுதலைப் பெறமுடியும். கட்சியைக் காக்க வேண்டும்! கஷ்டங்களைத் தாங்க வேண்டும்! ஓடியாடி உழைக்கவேண்டும்! தலைமைக் குழுவினர், இட்டதை நிறைவேற்றவேண்டும்! இவ்விதமெல்லாம் உழைத்து, கட்சித் தோழர்களிடமே, பாராட்டும் நல் வாழ்த்தும் பெற்றால்தான். அவர்களுள் முதல்வனாக விளங்க இயலும்.

கள்ளிச் செடிகளுக்குள் முல்லையிருந்தால், 'இது கள்ளி! இது முல்லை!' என்று எளிதில் கூறிவிடலாம். ஆனால், முல்லைத் தோட்டத்துக்குள்ளேயே, எவ்விதம் ஒரு முல்லை சிறப்பைப் பெறமுடியும்? எளிதல்லவே! ரஷ்யக் கம்யூனிஸ்டு அமைப்பில், ஒவ்வொருவரும், 'முல்லை'போலத்தான். அத்தகைய பூக்காட்டில், பொலிவோடு விளங்க, வாய்ப்புமட்டும் போதாது—உழைப்பும் வேண்டும்.

அத்தகைய உழைப்பின் மூலம், உயர்ந்தவர்தான், மாலெங்கோவ்.

"தலைவரின், வலது கை—இவர்! அதனால், அவருக்கு, கட்சியில் செல்வாக்கு"

"பெர்மிட்வேண்டுமா! லைசென்ஸ் தேவையா? அவரைப்பிடி—காரியமாகிவிடும். ஏனெனில், அவர்தான், ஆட்சித் தலைவரின் சகா!"

"இவன் என் நண்பன்!—அதனால், கட்சி மக்களே. எனக்குப்பின் இவனையே கட்சித் தலைவனாக, ஆக்குகிறேன்-ஏற்றுக்கொள்ளுங்கள் என் வாரிசை!"

இவ்விதம், 'வாரிசு' ஆக்கப்பட்டவரல்ல, தோழர் மாலெங்கோவ். ஸ்டாலினுக்கு வேண்டியவரென்பதாலல்ல, தலைவராக வந்தது. அவருடைய உழைப்பும், சலியாத முயற்சியும், கட்சிக்காக அவர்பட்டபாடுமே, இன்று கட்சித் தலைவராகவும் ஆட்சித் தலைவராகவும் வரச் செய்திருக்கிறது.

சின்னஞ் சிறு மாணவன் அவர்—முதலாவது, உலகப் பெரும் போர் நடை பெற்றபோது. வயது, 12.

ஜாரை வீழ்த்தி ரஷ்யப் புரட்சி நடைபெற்றபோது, அவருடைய வயது 15.

ஆகவே, ஸ்டாலின் — லெனின் போன்றோர், அனுபவித்த ஜாரின் கொடுமைகளைக் குறித்து, கேள்விப்பட்டவரே யொழிய, அனுபவித்தவர் அல்ல!—ஆனாலும், ஸ்டாலின் இடத்தை, இன்று நிரப்புகிறார்!!

தேசத்துக்காக இரத்தம் சிந்துவது, கொடுமைகளைத் தாங்குவது, சிறையில் வாடுவது —ஆகிய காரியங்களைச் செய்தோர் மீதே, மக்களின் ஆசையும் அன்பும் இருப்பது சகஜம். அத்தகைய அவதிக்கு ஆளானோர் — வாய்ப்புபெற்றோர் — மக்களின் இதயத்தில் இடம் பெறுவதும், சுலபம். சகஜம்.

ஆனால், மாலெங்கோவ், அத்தகைய வாய்ப்பைப் பெறாதவர்—ஆனாலும், 'ஸ்டாலின்' இடத்தை நிரப்புகிறார், எல்லோராலும் ஏகமனதாகக் கொண்டாடப்படுகிறார்.

அவருடைய உழைப்பு! தன் தாயகத்தை உருவாக்க அவர் பட்டபாடு!!—இரண்டும்தான், அவரை இன்றுஇந்த இடத்துக்குக்கொண்டு வந்திருக்கிறது. அவர் தலைவராக, உண்டாக்கப்பட்டவரல்ல! தலைவராக வளர்ந்தவர்!!

வாழ்நாள் முழுவதையும், கட்சி இயந்திரங்களுக்குள்ளேயே கழித்தார்—அதனால் ஸ்டாலின் அருகில் நெருங்கும் அருகதை பெற்றார்.

புரட்சி வெற்றி பெற்று, புது ஆட்சி மலர்ந்த நேரத்தில்தான், அவர் கம்யூனிஸ்டுக்கட்சியில் சேர்ந்தார்—1920-ம் ஆண்டில். அது முதல் கம்யூனிஸ்டுக் கட்சிக்குள், அவர் ஆற்றிய சேவையின் தரம் — உயர்ந்தது மிகச்சிறந்தது.

ஜார்ஜி மாக்ஸிமிலியனோவிச் மாலெங்கோவ்—15வது வயதில், நடைபெற்ற மாபெரும் புரட்சியைக் கண்டார். புனிதமான, நோக்கத்தோடு, அதனை நடாத்திய கட்சியின் மீது, அளவிலாத ஆவல் உண்டாயிற்று. பொதுவுடமைக் கட்சியில் சேர்ந்தார்—செஞ்சேனையிலும் வீரரானார்—பிறகு என்ஜினீயர் வேலைக்குப் படித்தார் — 1925ல் பட்டம் பெற்றார். பட்டம் பெற்ற வாலிபர், தனது படிப்போடு, காலந்தள்ளிவிடக் கருதவில்லை. வாங்கிய பட்டத்தோடு நேராக — பொதுவுடமைக் கட்சிக் காரியாலயம் நோக்கிச் சென்றார். அன்று முதல், அதுவே, அவருடைய உறைவிடமாயிற்று! கட்சிக் காரியாலயம்—தலைமை நிலையம் அதுதான்—புகுந்த அவர், அதன் ஒவ்வொரு பிரிவிலும் தொடர் பேற்படுத்திக்கொண்டார். வருவோர், போவோர் மூலம் 'சோவியத்'தின் நிலை பற்றிக் கேட்டுத் தெரிந்து கொண்டார். 1930ல்—மாஸ்கோ மாவட்டச் செயலாளராக ஆனார். நான்காண்டுகளில், தலைமை நிலையத்தில் மிகப் பொறுப்பான அலுவலில், அமர்த்தப்பட்டார்! ஊர்தோறும் அவர் சுற்றியலைந்து வேலை செய்ததும், இட்ட வேலையை செவ்வனே செய்து முடிக்கும் ஆற்றலும், அதைவிட தாயகத்தின் நல் வாழ்விலுள்ள அக்கரையும், ஸ்டாலினையும், கட்சியிலுள்ளோரையும் கவர்ந்தது. அதனால், கட்சியின் கொள்கைகளை வகுப்போரில் ஒருவராக, ஆனார்.

இரண்டாவது உலகப் போர் துவக்கப்பட்டதும், நாட்டு பாதுகாப்பு கமிட்டியின் உறுப்பினர்களில் ஒருவராக, பொறுப்பேற்றார். சிக்கல் மிகுந்த நேரம்! நேசத்தோடு பழகிய ஜெர்மனி, திடீரென்று மாஸ்கோ நகரை நாசம் செய்ய ஆரம்பித்தது. நாஜி விமானங்கள், நாள்தோறும் தாக்க ஆரம்பித்தன. நாஜிகளை முறியடிப்பதென்றால், அதற்குத் தேவையான ஆயுதத் தளவாடங்கள் உற்பத்தி செய்யப்பட வேண்டும்! ஆகாய விமானங்கள், உற்பத்தி பெருக வேண்டும்!! — இந்த பொறுப்பான இலாகாவைத் துணிவோடு ஏற்றார், மாலெங்கோவ் போக்கு வரத்து இலாகா—தொழில் இலாகா ஆகிய இரண்டுக்கும் பொறுப்பாளியானார். என்ஜினீயராகப் படித்துப் பெற்ற அனுபவம், இப்போது, மிகவும் பயன் பட்டது. மக்களுக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்துகொண்டிருந்த ஆலைகளிலெல்லாம், போர்த் தளவாடங்கள் செய்து குவிக்கப்பட்டன! விமானங்கள், வேகவேகமாகத் தயாராயின!! கோதுமைக் கழனிகளையும், மாபெரும் நகரங்களையும், நாசம் செய்து கொண்டிருந்தன. நாஜி விமானிகள். கோயரிங், கொக்கரித்தான்! ஹிட்லர், ரஷ்யா படும் பாட்டைக் கண்டு சிரித்தான்!! அங்கே வெற்றி — நாஜிப் படை முன்னேறுகிறது—நாளை மாஸ்கோவுக்குள் நுழையலாம் — என்று, உலகெங்கும், கிளியோடு பேச ஆரம்பித்தது. நாஜிப் படைகள், குதூகலமாக, முன்னேறிக் கொண்டிருந்தன! அவர்களை 'வெற்றியின்' குதூகலத்தில் திளைக்க அனுமதித்துவிட்டு, மாவீரன் ஸ்டாலின் போருக்கு வேண்டிய ஆகாய விமானங்களையும்—டாங்கிப் படைகளையும் — பீரங்கிகளையும் — உற்பத்தி செய்வதில், கவனம் செலுத்தினர். அந்தப் பொறுப்பை நிர்வகித்த, மாலெங்கோவ்,'கலங்காதீர், தலைவா!' என்றார். ஆலைகள், இரவு பகல், ஓடின! தளவாடங்கள் குவிந்தன!!

தளபதிகளிடமிருந்து, 'போதவில்லை — தளவாடம்!' என்றோர், தாக்கல் வரும்.

'என்ன பதில், அனுப்புவது?' என்பார், ஸ்டாலின்.

'சரி!' என்று சொல்லுங்கள்,என்பார், மாலெங்கோவ்.

ஆலைகள் எப்படித்தான் சுழலுமோ! அங்கே வேலை செய்வோர், எப்படித்தான் உழைப்பரோ!—தளவாடங்கள், குவிந்தபடியே, இருக்கும். ரஷ்யாவை, நாஜிவெறியனிடமிருந்து காப்பாற்றியதில், பெரும் பங்கு இவரைச்சாரும். ரஷ்யவிமானப்படையின் தந்தையென, இவரை அழைக்கலாம்! இவரால் தான், விமானப்படை பலம்வாய்ந்ததாக ஆயிற்று. பெர்லின் வீழ்ச்சிக்குப் பெரியதோர், காரணமாயிருந்தது, ரஷ்ய விமானப் படைதான். தங்களைச் சுட்டுப்பொசுக்கிய நாஜீ சக்கும்பலை, ஒன்றுக்கு இரண்டாகப் பழிவாங்கினர், செஞ்சேனை வீரர்கள்!

போர் முடிந்ததும், மாலெங்கோவ், மந்திரிசபைக் கவுன்சிலின், துணைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரைவிட, வயதில் மூத்தோர் பலரிருந்தாலும், அவரையே துணைத்தலைவராக ஏற்றனர் போரின் சீரழிவால் சிதைந்த, ரஷ்யாவின் பொருளாதார நிலையைப் பழைய நிலைக்குக் கொண்டுவரும், மகத்தான பொறுப்பை, அவர், ஏற்றார்.

தொழில் துறைகளில் புதுவளம்! மக்களின் வாழ்வில் போருக்குமுன்பிருந்த நிலை!!—மலர, பெருமுயற்சி எடுத்துக்கொண்டார்.

ரஷ்ய வாழ்க்கைமுறையில், ஒவ்வொரு குடும்பத்துக்கும், அதற்குத்தேவையான பொருள்கள், சரிவர வினியோகிக்கப்படும்படி செய்வது, மிகக்கஷ்டமானதோர், காரியமாகும். இந்த இலாகாவில், சிறுபிழையேற்படினும், தாங்கமுடியாது. இதனையும் அவரே கவனித்துக்கொண்டார்.

இவ்வளவு பொறுப்புகள்! அத்தனையும் கடுமையானவை!!—எனினும் புன்சிரிப்போடு செய்தார்.

அவரைச்சுற்றி எப்போதும், கட்சித்தோழர்கள் இருப்பாராம்—அவர்களோடு அளவளாவுதலும், விவாதிப்பதுமே, இவரது பொழுது போக்காம். இவ்வளவு வேலைப் பளுவைத்தாங்கிய மாலெங்கோவ், இதற்கும் நேரம் வகுத்திருந்தாரென்றால், அது அவருடையசெயல் திறனையே காட்டுகிறது! அதனால் தான், இன்று அவர், உலகின் ஒரு புதுப்பாகத்துக்கு, தலைமை தாங்குகிறார்.

அவரை, இவ்வளவு சிறந்த நிலைக்குக் கொண்டுவந்து வைத்தது — பணமல்ல! படாடோபமல்ல!! விளம்பரமல்ல!! உண்மைச் சேவை—உயரிய உழைப்பு—தாயகத்தின் மீது கொண்ட பற்று — கட்சிக் கொள்கைகளை கட்டிக்காக்கும் ஆர்வம், ஆகியவைகளாகும்.

தத்தமது தாயகத்தில், 'மாஸ்கோ மணம்', பெற விரும்புவோர், தோழர் மாலெங்கோவின் வாழ்க்கையை ஊன்றிக் கவனிக்க வேண்டும்.

முதலாளித்துவத் திட்டங்களோடு உலவும் அரசியல் கட்சிகளைவிட, அவைகளை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கும் புதிய உலகச் சிற்பிகளின் கூடாரங்களான முன்னேற்றக் கட்சிகள் தாம் மாலெங்கோவின் வாழ்க்கைமூலம் பல உண்மைகளை உணரலாம்.

(5-ம் பக்கம் பார்க்க)

சின்னஞ் சிறு சொல்

சின்னஞ்சிறு சொல்!—சிந்தனையைக் கிளறிவிட்டது. சின்னுபின்னப்படுத்துகிறது ஒரு அரசாங்கத்தை.

அரசாங்க பாரமேற்ற பிரதம மந்திரி, சட்டசபையில், வீசிய அந்தச் சொல், உலகத்தின் கவனத்தையே கவர்ந்துவிட்டது.

அந்தச்சொல்லின்மூலம், விளைந்த விபரீதம், கொஞ்சமல்ல! ஒரே கட்சியினர், இரு கூடாரமாகிவிட்டது. தலைவனையும் தொண்டர்களையும், வெவ்வேருக்கிவிட்டது.

தலைவன், குற்றவாளிக் கூண்டில்! அவன்மீது, குற்றப்பத்திரிகை படிக்கிறது, சட்ட மன்றம!! அதுவும் எத்தகைய சட்டசபை?—அவருக்கு மெஜாரிடி பலமுள்ள சட்டசபை. அந்தச் சட்டசபை, அவர்மீது, நடவடிக்கையெடுத்திருக்கிறது — காரணம், அந்தச் சிறு சொல்! சுடுசொல்!!

“பிரதம மந்திரியாயிருந்தாலென்ன? இப்படியா பேசுவது! எதிர்க்கட்சியைத் தூற்றுவதற்கு இவ்வளவு மட்டரகமான வார்த்தையையா, வீசுவது? வெட்கம்! வெட்கம்!! உலகம், காரித்துப்பும். இவ்வளவு மட்டரகமான சொல்லை உபயோகித்த அவருடன் நானிருப்பதே, தவறு! இதோ விலகினேன்!!”—என்று, வெளியிட்டுவிட்டு, விவசாய அமைச்சர், விலகியிருக்கிருர்; அச்சொல், வீசப்பட்டபிறகு.

இத்தகைய சுடுசொல்லை, ஒரு ஆட்சியின் பிரதமர், வீசினுர் எதிர்க்கட்சிக்காரர் ஒருவர்மீது. அதனை, சொந்தக் கட்சியினர், கண்டிக்கின்றனர்! விலகுகின்றனர், அவரைவிட்டு!! இந்த விசித்திரம்‘ ஜப்பானில் நடைபெறுகிறது, கடந்த சில நாட்களாக.

சட்டசபையில் பிரதமமந்திரி யோஷிடா, சோஷியலிஸ்டு மெம்பரான எதிர்க்கட்சிக்காரர்மீது, வீசினுர், அந்தச் சுடுசொல்லை! ஆனுல், அத்தகைய சொல்லை அவர் வீசியது தகாது, என்று கூறி அவரைச் சேர்ந்தோரே கண்டிக்கின்றனர்!!

“மெஜாரிடிகட்சி,என்னுடையது. என்னசெய்வாய்?”—இந்தக் கர்வம், தலையில் அதிகமிருந்த படியால், ஆணவத்தோடு, வீசினுர், அச்சொல்லை. ஆனுல், ‘அவருடைய மெஜாரிடி கட்சியே சிதறுகிறது! கரைகிறது!! திகைக்கிருர்—தவிக்கிருர்—‘தப்புத்தான், மன்னியுங்கள்’ என்று வேண்டுகோள் விடுக்கிருர்.

அமெரிக்காவின் கைப்பொம்மைபோல ஆடிக்கொண்டிருக்கும், சின்னஞ் சிறு தீவு, ஜப்பானிலே, சிந்தனையைக் கிளறும் இவ்விஷயம். சொந்தக் கட்சியினர் மீது, அல்ல, யோஷிடா, சுடுசொல் வீசியது — ‘எதிரி’யின்மீது.

ஆனுல், எதிர்ப்போ, எதிரியிடமிருந்துமட்டுமல்ல—சொந்தக்கட்சியிடமிருந்தும்.

‘இவ்வளவுதிமிரா!’ — இவ்விதம் எதிர்க்கட்சிகள், கேட்கின்றன.

‘இவ்வளவு மட்டரகமா?’— சொந்தக்கட்சியினர், கேட்கிருர்கள். இரண்டுக்குமிடையிலே, சிக்கித்தவிக்கிருர், பிரதமர்—கண்டனத் தீர்மானம், சட்டசபையில் நிறைவேற்றப்பட்டு விட்டது.

ஜனநாயகயுகத்தில்,நடைபெறும், சிந்தனைக்குரிய காட்சியை, ஜப்பான் அரங்கில், காண்கிருேம்.

எதிர்க் கட்சியென்ருலே ஏளனத்தை வீசவேண்டும், இழி சொற்களால் அர்ச்சிக்க வேண்டும், இல்லாததையெல்லாம் கூறிப்பேச வேண்டும், ‘ஏடா’ எனல் வேண்டும், ‘மூடா’ என்றழைக்கவேண்டும், ‘முட்டாள்’ ‘நான்சென்ஸ்’ என்றெல்லாம் பேசவேண்டும்—அவ்விதம் ஆர்ப்பரிப்பதுதான் அறிவுள்ள மேதையென்பதற்கு அடையாளம்! அலங்காரமான மாலைகளைக் கட்சித் தொண்டர் குழாம், சூட்டும்!! — என்ற ‘சில்லரை’ மனோபாவம், ஜப்பானை ஆளும் லிபரல் கட்சியில், இல்லை. எனவேதான், தமது தலைவர், தகாத சொல்கொண்டு, எதிர்க்கட்சித் தோழர் ஒருவரைத் தாக்கியது கேட்டதும், தாமேமுன்னின்று கண்டித்திருக்கின்றனர். ஆகா! எவ்வளவு, பெருந்தன்மை, இது. சின்னத் தீவில், சிந்தனையைக்கிளறக் கூடிய சம்பவம்.

யோஷிடா, சட்டசபையில் பேசிய சோஷியலிஸ்டு மெம்பரை ‘மடையா!’ (Block-head) என்று அழைத்து விட்டார்.

‘எப்படிக் கேட்கலாம்?’ என்றனர், சோஷியலிஸ்டுகளும் பிறரும் ‘தவறுதான்!’—என்ருர், சொல்லை வீசிய, யோஷிடா.

“தவறு மட்டுமா? உலகம் நம்மைக் கண்டு, எள்ளி நகையாடும்! இதனைக் கண்டித்தே, தீருவோம்—சபை விதிக்கும் தண்டனையை நீர், ஏற்றேயாக வேண்டும்’ — என்று, அவருடைய சொந்தக் கட்சியே, முன்னின்று முடிவு செய்திருக்கிறது.

முடிவை, முறைத்துப்பார்க்கிருர், பிரதமர்! கட்சி கரைவது, கண்முன் தெரிகிறது! கலங்குகிருர், தான், அவசரத்தில் வீசிய அந்தச் சொல் உண்டாக்கியிருக்கும் விபரீதத்தை எண்ணி.

ஜனநாயகத்துக்கு உயிரளித்து, எதிர்க்கட்சிகளையும், கட்சிகளாக மதிக்கும் கண்ணியம் தமக்குண்டு என்று ஜப்பானை ஆளும் கட்சி, நிரூபித்துக் காட்டிவிட்டது. அதன் பெருமைக்கு, இந்தச் சிறு விஷயம், நல்லதோர் எடுத்துக்காட்டு —அந்த நற்பண்பாளர்களைப் பாராட்டுகிருேம். அதே நேரத்தில், இங்குள்ள ‘நமது’ பார்லிமெண்டினையும், நினைவுபடுத்திக்கொள்கிருேம்.

★

புதுமை விருந்து!

எண்ணத்திலே புதுமை!
எழுத்திலே புதுமை!
ஏட்டிலே புதுமை!

எஸ். பி. நாதன் எழுதிய

வாழ முடியாதவன்

(முழு நாடகம்)

விலை அணு 12, கழிவு 25o/o.

கருணுநிதி பதிப்பகம்
சென்னை-2.

புயல் நிவாரண நிதி

25000-த்தை தாண்டிவிட்டது

ரூ. 25733—5—2

[இதுவரை]

முன் கணக்குப்படி	22461—4—5
சென்னை ‘பரப்பிரம்மம்’ நாடகமூலம்	1000—0—0
கடலூரில் மு. கருணுநிதி, எம். ஜி. ஆர், சிவாஜி-கணேசன முன்நிலையில் இளம்வழுதி நடித்த ‘நல்லதீர்ப்பு’ நாடகத்தின் மூலம்	1400—0—0
மதுரை கொண்டயம்பட்டியில் சத்தியவாணிமுத்து பேசிய கூட்டத்தில் அளிக்கப்பட்டது	
மாடசாமி	12—9—0
ராமலிங்கம்	1—0—0
பழனிசாமி	1—1—3
மாசேதுங்	0—5—9
மேலச் சின்னம்பட்டி தி. மு. க.	1—0—0
அய்யனம் பட்டி கம்யூனிஸ்டு கட்சி	1—0—0
பீஹார், சிங்கப்பூர், மோசபோனிமைன்ஸ் தென் இந்திய சமரச சன்மார்க்க சங்கம்	103—0—0
இராசபாளையம் தி. மு. க.	22—4—0
சைதாப்பேட்டை கலைச்சோலை கழகம் முருகேசன் மூலம்	12—0—0
மௌண்ட்ரோடு உடுப்பி கிருஷ்ணவிலாஸ் தொழிலாளர்கள்	35—10-0
குமாரம் கருப்பையா	1—0—0
கீழ்விசாரம் தி. மு. க.	11—0—0
திருவல்லிக்கேணி தேவராஜ்	1—0—0
சென்னை பரப்பிரம்ம நாடகத்தில் கைத்தறி பையை ஏ. பி. பெருமாள் ஏலம் எடுத்த வகையில்	100—0—0
பச்சையப்பன் கல்லூரி திராவிட மாணவ முன்னேற்றக்கழகம்	120—0—0
போத்தனூர் மாணவர் கால்பந்தாட்ட மன்றம்	3—0 - 0
ஒரக்காட்டுபேட்டை	5—0—0
குமுகதுளி தி. மு. க. மூர்த்தி	5—0—0
குடந்தை கல்லூரி நெடுமாறன்	1—0—0
சால்வாக்கம் முத்துசாமி	1—0—0
எடையார் முத்துசாமி	0—8—0
பெங்களூரில் மு. கருணுநிதி பேசிய பொதுக்கூட்டத்தில் பணமுடிப்புகளாகவும் உண்டியல் வசூலிலும் தரப்பட்டது	400—0—-0
ராயப்பேட்டை நண்பர்கள் கழகம் (முன்பு கொடுத்தது 10—12—9)	8—10-9
கல்கத்தாவிலுள்ள சென்னை ராணுவத்தோழர்கள் எம். கே. வேலன் மூலம்	25—0—0
	25733—5—2

மு. கருணுநிதி
புயல் நிதிக்குழு செயலாளர்
தி. மு. க.

பெங்களூரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கருணுநிதியிடம் தரப்பட்ட

பணமுடிப்புகள் விபரம்

அக்கிப் பேட்டை தி. மு. கழகம்	201—0—0
முரசொலி நாடக மன்றம்	101—0—0
முற்போக்கு தோழர் மன்றம்	3—2—9
ஜி. ஆ. சாமி	2—0—0
கலாசிபாளையம் தோழர்கள்	12-12—0
ஜி. சின்னப்பா	51—0—0
மு. க. வேந்தன்	1—1—0
ம. அரசி	0—8—0
பன்னீர் செல்வம்	1—1—0
அனுதாபி	1—0—0
உண்டியல் மூலம்	25—7—3
ஆக மொத்தம் ரூ.	400—0—0

திருச்சி மாவட்ட செயற்குழு கூட்டம்

13—2—53 மாலை 3-மணிக்கு திருச்சி மாவட்ட செயற்குழு கூட்டம் செயலாளர் ஏ. பி. தர்மலிங்கம் அவர்கள் தலைமையில் குளித்தலை சந்திரா டாக்கீசில் கூடியபோது கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1. நகரகழகச் செயலாளரும், மாவட்ட கழக பிரதிநிதியுமான தோழர் எம்.எஸ். மணி அவர்களின் ஆண்குழந்தை இயற்கை எய்தியமை குறித்து இக்கூட்டம் வருந்துவதோடு, அன்னுருக்கும் அன்னுர் குடும்பத்தினருக்கும் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

2. (அ) திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக 2-வது மாநாட்டை ஏப்ரல் 4, 5, தேதிகளில் லால்குடியில் நடத்துவதென்றும், மேற்படி மாநாட்டிற்கு, மாவட்டக்குழுவே வரவேற்புக்குழுவாக இருந்து செயலாற்றுவதென்றும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

(ஆ) மாநாட்டு வரவேற்புக் கமிட்டியை விரைவில் திருச்சியில் கூட்டி மாநாட்டிற்கு வரவேற்புக்குழு தலைவர், செயலாளர், பொருளாளர், மாநாட்டுத் தலைவர், திறப்பாளர் ஆகியோரைத் தேர்ந்தெடுப்பதென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

(3) திருச்சி மாவட்ட தி. மு. கழக 2-வது மாநாட்டை நடத்த அனுமதி தருமாறு பொதுச்செயலாளரை இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

4. (அ) டால்மியாபுரம் போராட்டத்திற்கு கலைஞர் கருணுநிதி அவர்களை முன்னிருந்து நடத்திக் கொடுக்குமாறு இக்கமிட்டி கேட்டுக் கேட்டுக்கொள்ளுகிறது.

(ஆ) டால்மியாபுரம் போராட்டத்தை நடத்தும் நிதிக்காகதோழர் கருணுநிதியை ஓர் நாடகம் நடத்தித்தரவேண்டுமென்று இக்கமிட்டி கேட்டுக்கொள்ளுகிறது.

5. பழைய வரவு செலவுக்கணக்குகளைப் பார்த்து அதில் மீதம் ஒன்றுமில்லாததால் 1—1—52- முதல் புது அங்கத்தினர்கள்சேர்ந்த சந்தா மூலம் வரவு வந்த தொகையிலிருந்து புது நிர்வாகக் குழுவினர் கணக்கு வைத்துக்கொள்வதென்று தீர்மானிக்கப்பட்டது.

இத்துடன் இரவு 7-மணிக்கு நன்றி கூறுதலுடன் கூட்டம் இனிது முடிந்தது.

★

"ஆரிய நாடு தேவை"!

"ஆரியநாடு தேவை!"

"நாங்கள் ஆரிய இனம்."

"ஆளமுடியும் எங்களால்!"

"பத்து லட்சம் பேர் இருக்கிறோம்"

"மத்திய சர்க்கார் அலட்சியம் செய்கிறது"

"அவர்கள் முன்னேறி விட்டனர் நாங்கள் மட்டும் பின் தங்கிக் கிடப்பதா?"

"ஆரிய நாட்டை அடைந்தே தீருவோம்!"

இதுகட்டுக்கதையல்ல; இத்தகைய முழக்கம், பெருத்தளவில் எழும்பியிருக்கிறது—கூட்டங்கள் கூட்டி, தீர்மானங்கள் நிறைவேற்றி, சர்க்காருக்கு அனுப்பிய வண்ணம் இருக்கிறார்கள். அண்மையில் மாநாடொன்றும் நடைபெற்றது—இருநூற்றுக்கு மேற்பட்ட பிரதிநிதிகள், பல பாகங்களிலிருந்து, வந்து கலந்து கொண்டனர். எல்லோரும் ஏகோபித்த கருத்துடன் தீர்மானம் நிறைவேற்றினர், "ஆரிய நாடு எமதே!" என்று.

பர்மிய சர்க்காரின் பார்வைக்குக் கீழ் வசிக்கும் அரக்கான் தான், அவர்கள் குறிப்பிடும், ஆரிய நாடு. பர்மாவின் மேற்குக் கோடி எல்லையில், வங்கக் கடலின் ஓரத்திலிருக்கும், அரக்கான் பிரதேசத்தைத் தனி நாடாக்க வேண்டுமென, அங்கு வாழ்வோர், கோருகிறார்கள்,

மலைவளம் காட்டுகிறார்கள் — பாரீர்! அரக்கன் யோமாவை, அங்கு விளையும் விளைச்சல்போதும், எமக்கு. ஆகவே, தாரீர் தனிநாடு! இதோ! மூங்கிற்காடு — அருமையான பேபர்மில் நடத்தமுடியும். தாரீர், எமக்குத் தனிநாடு!

45 லட்சம் ரூபாய் வரி செலுத்துகிறோம்—வரியை வாங்கும் பர்மிய மத்யசர்க்கார் எங்களை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்துகிறது. சகியோம், இனி! தனிநாடு தேவை!!

நிலவளம் உண்டு எம்மிடம்! கழனியும் காடும் ஏராளம்! உழைக்கும் மக்களுமுண்டு—ஆகவே, எமது பிரதேசத்தை எமக்குத் தாரீர்! நாங்கள் ஓரினம்—எங்கள் கூட்டத்தினர் ஆரிய இனம். இதில், பேதமில்லை—பிளவில்லை. ஆகவே தடை கூறுதீர். தருக, எமக்கு, தனிநாடு!

இவ்வண்ணம், 'அரக்கான்' பிரதேசத்தில் வாழும் மக்கள் கடந்த 16ந்தேதி, அக்யாப் எனும் தலைநகரில்கூடி, தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள் — தமது தீர்மானத்தை விளக்கி, அவர்கள் பிரச்சாரமும் செய்து வருகிறார்களாம்—"ஆரிய நாடு" அவர்கள் கேட்பதற்குள்ள காரணம், அவர்களது நலனைப் பர்மிய சர்க்கார் புறக்கணித்துவிட்டதென்பதுதான்—மத்ய சர்க்கார் எமது வரிப்பணத்தில் வாழ நாங்கள்மட்டும் ஏன் வதையவேண்டும். எங்கள் நாடு, எங்களிடமிருந்தால் எங்களிஷ்டப்படி ஆண்டு கொள்கிறோம்' என்று ஆதாரங்களோடு கேட்கிறார்கள்.

ஆரியநாடு, கோருவோர் தொகை பத்து லட்சம் தான்! அவர்கள் முழக்கமிடுகிறார்கள், தனி நாடு கோரி—ஆனால் ஐந்து கோடி மக்களாகிய நாம் "திராவிட நாடு" கேட்கிறோம் — நம்முடைய கோரிக்கை புறக்கணிக்கப்படுகிறது. 'ஆரியநாடு' கோருவோரின் செய்தியோ, 'இந்து' இதழில் பிரமாதமாக வெளிவந்திருக்கிறது, 17-2-53 இதழ் 7ம் பக்கத்தில்.

★

கலங்கும் கழகங்கள்

பாண்டியனார் மறைவுகேட்டதும் நாடெங்குமுள்ள நமது கழகத்தவர் கலங்கினர்—கொடிகளை இறக்கி கடைசி மரியாதை செலுத்தினர். அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றினர்:—

நாசரத் (நெல்லை) தி. மு. க.
காரைக்கால் தி. மு. க.
பாண்டியன் படிப்பகம் கோவை
திருவாரூர் தி. மு. க.
குல்லலக்குண்டு தி. மு. க.
சோழவந்தான் தி. மு. க.
நாடார் வாலிபர் சங்கம் (இராமநாய்க்கன்பட்டி)
பரமக்குடி தி. மு. க.
தஞ்சை தி. மு. க.
கருதை தி. மு. க.
சின்னாளப்பட்டி தி. மு. க.
போடிநாயக்கனூர் தி. மு. க.
திருவாரூர் நாடார் சங்கம்
புதூர்—(மதுரை)
அழகிரிபடிப்பகம் (கீழமாசிவீதி)
பட்டிவீரன்பட்டி தி. மு. க.
இனவளர்ச்சி மன்றம், எமனேஸ்வரம்.
முக்கூடல்—தி. மு. க.
மணப்பாறை—தி. மா. மு. க.
கீழச்சண்முகபுரம் தி. மு. க.
நிலக்கோட்டை தி. மு. க.
பழைய ஆயக்குடி தி. மு. க.
ஆற்காடு தி. மு. க.
சென்னிமலை தி. மு. க.
கோரிப்பாளையம் தி. மு. க.
கோவை-23, தி. மு. க.
தாத்தையங்கார் பேட்டை செங்குன்றபுரம் தி. மு. க.
சென்னை தி. மு. க.
சென்னை—5 தி. மு. க.
புதியம்புத்தூர் தி. மு. க.
சிவகிரி தி. மு. க.
பூவிருந்தவல்லி தி. மு. க.
சீவில்லி புத்தூர் தி. மு. க.
சென்னை—13 தி. மு. க.
சென்னை—1 பாரதிதாசன் இளைஞர் கழகம்
சென்னை—10 இளங்கோ இளைஞர் மன்றம்
சலகண்டபுரம் தி. மு. க.
கடையநல்லூர் தி. மு. க.
சென்னை—1 தோழமைக் கழகம்
கோபிசெட்டிபாளையம் தி.மு.க.
கீழநம்மங்குறிச்சி தி. மு. க.
முத்துப்பேட்டை தி. மு. க.
சென்னை—43 தி. மு. க.
சென்னை-10 தி. மு. க.
சென்னை—5 டாக்டர் சி. நடேசன் இளைஞர் கழகம்
தர்மபுரி — திருவள்ளுவர் நூல் நிலையம்
சூலூர்—தி. மு. க.
சி. சோர்ப்பனந்தல் தி. மு. க.
தேவபாண்டலம் தி. மு. க.
ஆம்பூர்—தி. மு. க.
கோயமுத்தூர் தியாகராயர் படிப்பகம்
புஞ்சைப்புளியம்பட்டி—தி. மு. க.
பழனி—தி. மு. க.
சென்னை—23 தி. மு. க.
பட்டுக்கோட்டை—தி. மு. க.

புயல் நிவாரண நிதி
செயலாளர் அறிவிப்பு

திராவிட முன்னேற்றக் கழகம் திட்டமிட்டு பணியாற்றியபடி புயல் நிவாரணநிதி 25,000த்தைத்தாண்டிவிட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்வதோடு, இந்த நிதி முயற்சி இத்துடன் முடிவடைகிறது என்றும் இனியும் இந்த நிதிக்குத் தொடர்ந்து நன்கொடைகள் தி. மு. க. புயல் நிவாரண நிதிக் குழுவிற்கு அனுப்ப வேண்டாமென்றும், முன்கூட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சிகள்மூலம் வசூலாகும் தொகையைமட்டுமே பெற்றுக்கொள்ள இயலுமென்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மு. கருணாநிதி,
செயலாளர், புயல் நிதி.

பாண்டியன் நினைவு நாள்

அருப்புக்கோட்டை 8—3—53 இரவு 7-மணிக்கு பாண்டியன் திடலில் பாண்டியன், பழனிச்சாமி ஆகியவர்களின் நினைவு நாள் கூட்டம் ஆ. சொக்கலிங்கபாண்டியர் தலைமையில் நடைபெற்றது. எம். எஸ். இராமசாமி, சு. காளிமுத்து ஆகியோர் மறைந்த செயல் வீரரின் சேவை குறித்துப் பேசினர்.

மாயவரம் 8—3—53 ஞாயிறு மாலை கூறைநாடு கடைவீதியில் சௌந்தரபாண்டியனார் நினைவு நாள் பொதுக்கூட்டம் தோழர் து. காசிநாதன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கே. கே. நீலமேகம், ஆர். பழனிச்சாமி, எஸ். கே. சாமி ஆகியோர் பாண்டியனாரின் வீரத் தொண்டு குறித்துப் பேசினர்.

பொய்கை நல்லூர் 8-3-53-மாலை ப. தெ. கோவிந்தசாமி தலைமையில் இ. அகமது, கி. சிவசாமி, அ. ராமையா, வீ. வீரப்பன், கு. நடராஜன், அ. பெரியநாயகம், ஜீ. சோமசுந்திரம், ப. ஆறுமுகம் ஆகியோர் பாண்டியனாரின் தொண்டுபற்றிப் பேசினர்.

கமுதி: 8-3-53 மாலை சந்தனப் பேட்டை திடலில் சிவ. சண்முகசுந்தரம் தலைமையில் பாண்டியனார் நினைவுநாள் கூட்டம் நடைபெற்றது.

சைதாப்பேட்டை; (சென்னை) 8—3—53 காலை க. முருகேசன் தலைமயில் பாண்டியனார் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது.

மேச்சேரி: 8—3—53 மாலை டி. ஜே. சம்பத் தலைமையில் விஜயரங்கம் பாண்டியனாரின் பண்புகள் குறித்துப் பேசி அனுதாபம் தெரிவித்தார்.

அபிராமம்: 8—3—53 மாலை பாண்டியனார் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது.

வடுகபட்டி: 8—3—53 மாலை இரா. கூடலிங்கம் தலைமையில் பி. பாண்டியன், பாகு, இராமசாமி, மேத்தா ஆகியோர் பாண்டியனாரின் சேவை குறித்துப் பேசினர்.

கீரனூர்: 8—3—53 இரவு 10-மணிக்கு இ. ச. பழனிச்சாமி தலைமையில் சேரன், அய்சக், காந்தி இரத்தினம், மஜீது ஆகியோர் பாண்டியன் பண்புகள்குறித்துப்பேசினர்.

குரவப்புலம்: 8—3—53 மாலை பி. எஸ். நடேசன் தலைமையில் துரை, இளம்வழுதி, முருகையன், செ. பெருமாள், கிருஷ்ணசாமி, இராமையன், அய்யாத்துரை முதலியோர் பாண்டிய ஆற்றிய தொண்டு குறித்துப் பேசினர்.

நிலக்கோட்டை 8—3—53-மாலை பொன்ராமன் தலைமையில் நடிகமணி டி. வி. நாராயணசாமி, கே. வீரபத்ரன், என். பி. முத்திருளாண்டி, இ. காத்தான், கோவில்பிள்ளை ஆகியோர் பாண்டியனாரின் சேவை குறித்துப் பேசினர்.

காவேரிப்பட்டணம் 8—3—53 மாலை கே. எம். ராஜு தலைமையில் டாக்டர் என். அன்னாஜி, ஆர். வெங்கடாசலம், ஆகியோர் பாண்டியனுக்கு அனுதாபம் தெரிவித்தும் ஸ்டாலின் மறைவுக்கும் அனுதாபம் தெரிவித்தனர்.

சென்னை-7: 8—3—53 காலை தி. மு. க. அலுவலகத்தில் சு. பாலன் தலைமையில் மு. மாசிலாமணி, கலியாணசுந்தரம் ஆகியோர் பாண்டியன் மறைவு குறித்துப் பேசி அனுதாபம் தெரிவித்தார்.

குளத்தூர்: 8—3—53 மாலை பொ. முருகேசபாண்டியன் தலைமையில் பாண்டியனார் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. பொ. மாரியப்பன், மு. மாணிக்கவாசகம், க. எட்டப்பன் ஆகியோர் பாண்டியனார் சேவை குறித்துப் பேசினர்.

★

திக்கற்றோம்

பசியில்லை, பஞ்சமில்லை, பாதவித்துப்
பட்டினியால் மக்கள் அழும் குரலுமில்லை!
நசிவில்லை, நலிவில்லை, ஏழை மக்கள்
நடுத்தெருவில் பிணமாக விழுவதில்லை!
குறைவில்லை நலமெல்லாம் வாய்ந்த தங்கே!
கூட்டுமுறை—பொதுவுடமை—கண்டார் அங்கே!
முறைகெட்ட முதலாளித்துவத்தின் கண்கள்
மூடிவிட வழிகண்டான் ஸ்டாலின் அண்ணல்!

பணத்திமிரும் போர்வெறியும் நிறக்கொழுப்பும்
பச்சை உடல் ரஷ்யாவை அண்டாதாக,
குணக் கடலாய் நாடாண்டான், பகைமை கொள்வோர்
குலைநடுங்கப் பொன்னாடாய் நாட்டைச் செய்தான்
உணவு, உடை இருக்க இடம் எல்லாம் கூடும்!
உற்சாகம் நாடெங்கும் கீதம் பாடும்!
இணையில்லா வீரனவன்! ஸ்டாலின் என்றால்
"இரும்பு உடல்—எளியகுணம்—நல்ல உள்ளம்!"

மக்களையே நினைத்திருந்தான் மாண்டான்—ஏழை
மக்களுக்காய் வாழ்ந்திருந்தான் மாண்டான்—கோழை
மக்களுக்கும் உரம் தந்தான் மாண்டான்—பூமி
மக்களுக்கே எனச்செய்தான் மாண்டான்!

துக்கத்தால் மக்களெல்லாம் கண்ணீர் சோரத்
துடிதுடித்துப் பதை பதைத்து வேகவிட்டுத்
"திக்கற்றோம்! யாரினிமேல் புதுமை சொல்வார்?
திடம் மிகுந்தோய் மாண்டாய்!" என்றலறவிட்டுப்
போய்விட்டான்—நிகரில்லாப்
புரட்சி வேந்தன்!

ஓங்கிய கரங்கள் எங்கே? உரம் தருகுரல்தான் எங்கே
வீங்கிய தோள்கள் எங்கே? விண்ணகல் மனம்தான் எங்கே?
தேங்கிய நீரைப்போலும் தினந்தொறும் உதவும்கொள்கை
தாங்கிய வீரன் ரஷ்யத் தாய்மகன் எங்கே? எங்கே?
கேட்கிறார் மாந்தர்—பூமி
கேள்வியே பதிலாய் ஈய!

—கண்ணதாசன்.

காலமும் கருத்தும்

அவர்கள் அப்படி! நாம் இப்படி!

"ஏடா தம்பி-ஏன் நிற்கிறாய் மரம் போல—விழுந்து வணங்கு சூரிய பகவானை—அவர் தானடா நம் கண்கண்ட தெய்வம்"—இந்தப் பேச்சு இன்னமும் நடந்து கொண்டிருக்கிறது நம்முடைய நாட்டிலே! "மாரிக் காலத்தில் வானவில் ஏழு நிறங்களோடு எழில்படத் தோன்றுகிறதே, அது என்ன தெரியுமா? சூரிய பகவானின் தேரை இழுத்துச் செல்கிற ஏழு குதிரைகளின் ஏழு வகை நிறங்களப்பா அவை"—இந்த உரைபாடலை நம் மக்கள் இன்னமும் நிறுத்திவிடவில்லை. சூரியனைத் தேவனாகக் கருதி அவனுக்கு இன்னமும் நாம் பாலும் பழமும் படைத்துக்கொண்டுதான் இருக்கிறோம்; சூடம் கொளுத்தித் திருவிளக்கு ஏற்றி அவனை நித்த நித்தம் விழுந்து வணங்கிக்கொண்டுதான் இருக்கிறோம். சூரியன் ஒரு நெருப்புக் கோளம் என்பதைப் பள்ளிக்கூடத்தில் படித்த போதிலும், வாழ்க்கையில், சூரியனை, ஒரு கடவுளாகத்தான் இன்றளவும் எண்ணி வணங்குகிறோம் நாம். நமக்குச் சூரியனிடத்தில் பயம், பக்தி—ஆகவே நமக்குச் சூரியனைப்பற்றி விஞ்ஞான ஆராய்ச்சிகளைச் செய்ய வேண்டுமே என்கிற அக்கறை தோன்றவில்லை.. ஆனால், நாம் சூரியனைத் தேவனாக்கி, பெண்டு பிள்ளை குடும்பம் சுற்றத்தாரை அவனுக்கு கற்பித்து, அவனுக்கென்று ஒரு புராணமும் ஒரு இதிகாசமும் உருவாக்கிக்கொண்டிருக்கிற இதே நேரத்தில், மேல் நாட்டினர் சூரியனின் ஒளியைப் பற்றிய அருமையான ஆராய்ச்சிகளை நடத்தி வருகின்றனர். சூரிய ஒளியைக்கொண்டு சமையல் செய்ய முடியுமா—இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கின்றனர் மேனாட்டு விஞ்ஞானிகளில் சிலர். இயந்திரங்களை இயக்குவதற்கும் ஆலைகளை ஓட்டுவதற்கும் சூரியனின் கதிர்களைப் பயன் படுத்த முடியுமா — இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கின்றனர் அந்த விஞ்ஞானிகளில் வேறு சிலர். மின்சார சக்திக்குப் பதிலாக சூரிய சக்தியைப் பயன்படுத்த இயலுமா—இந்தக் கருத்து குடைத்துகொண்டிருக்கிறது அந்த விஞ்ஞானிகளில் வேறு சிலர் உள்ளத்தை. பிரஞ்சு நாட்டு விஞ்ஞானிகள் இந்த மாதத்தில் கண்டுபிடித்துள்ள ஓர் உண்மை, உண்மையிலேயே நம் உள்ளத்திற்கு மகிழ்ச்சியை ஊட்டுவதாக அமைந்திருக்கிறது. சில வகையான நிலைக் கண்ணாடிகளைக்கொண்டு சூரியனின் ஒளியை ஒரு பிரம்மாண்டமான பாத்திரத்தின் மீது விழவைத்தால், 3000 டிகிரி உஷ்ணம் உண்டாகும் என்று அவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்த அரிய உண்மையைத் தங்கள் அறிவின் திறத்தால் ஆராய்ந்து அறிந்ததோடு நிற்கவில்லை அந்த விஞ்ஞானிகள். தாங்கள் கூறிய முறைப்படி சூரிய ஒளியைக் கொண்டு 3000 டிகிரி உஷ்ணத்தை உண்டாக்கி, அந்த உஷ்ணத்தின் மூலம் 155 பவுண்டு எடையுள்ள எஃகை உருக்கியும் காட்டியிருக்கிறார்கள். எஃகு—மிகவும் கடினமான பொருள், அந்தப் பொருள் உருகியிருக்கிறது சூரிய ஒளியால். நண்பர்கள் கவனிக்கவேண்டும் வெறும் பக்தியால் அல்ல இந்தக் காரியம் நடந்திருப்பது—அறிவின் சக்தியால்! ஆராய்ச்சியின் விளைவால்! பாரிஸ் நகர விஞ்ஞானிகள் தங்கள் அறிவின் திறத்தால் நெடுந் தொலைவுக்கு அப்பால் உள்ள சூரியனைக் கூட தங்களுடைய ஏவலாளாக ஆக்கிக்கொண்டிருக்கிறார்கள் ஆனால் நாமோ? சூரியனை இழுக்க ஓர் தேர் உண்டு-அந்தத் தேருக்கோ ஏழு குதிரைகள் உண்டு என்று பஜகோவிந்தம் பாடிக்கொண்டிருக்கிறோம். அவர்கள் அப்படி! நாம் இப்படி! இப்படியே இருந்தால் நம்முடைய மனப்போக்கு, நம் நாடு முன்னேறுவதுதான் எப்படி?

அதிசயம்! ஆனால் உண்மை!!

"ஆரம்ப ஆசிரியர்களுக்கு மாத ஊதியமாக ரூபாய் இருபத்தைந்து கொடுத்தால் போதும். அதற்கு மேல் கொடுக்கவேண்டிய அவசியமில்லை" இப்படி ஒரு மனிதர் பேசியிருக்கிறார். இந்த இந்தியாவில்! இப்படிப் பேசியிருப்பவர் விலாசம் தெரியாத பேர்வழி அல்ல—ஒரு எம். எல். ஏ. அதிலும் சாதாரண எம். எல். ஏ. அல்ல—மந்திரி நாற்காலியில் வீற்றிருப்பவர்—அதுவும் கல்வி மந்திரியாக அமர்ந்திருப்பவர் பெயர், ஸ்ரீமான் பன்னாலால்போஸ்—அவர் கல்வி அமைச்சராக இருக்கும் மாகாணம், மேற்கு வங்காளம்! பொறுப்புள்ள பதவியில் வீற்றிருக்கும் ஒரு மனிதர் இவ்வளவு பொறுப்பற்ற தன்மையில் பேசுவார் என்று எந்த ஆசிரியரும் எதிர்பார்க்கத்தான் முடியாது. ஆனால் எதிர்பாராதது நடந்திருக்கிறது. மேற்குவங்காளத்தில்—பேசியிருக்கிறார் கல்வி அமைச்சர் இந்த விதமாக. நம்பமுடியாதது! ஆனால் நடந்திருக்கிறது!! அதிசயம்! ஆனால் உண்மை!! நல்லறிவாளர் எவரும் கூறக்கூடாத வாசகம்! ஆனால் கூறியிருக்கிறார் வங்காள மாகாணகல்வி அமைச்சர்!! மாத சம்பளம் ரூபா இருபத்தைந்து—போதுமாம் ஆரம்ப ஆசிரியர்களுக்கு—கூறுகிறார் தைரியமாக ஒரு கல்வி அமைச்சர்! எப்படிப் போதும்? உண்ண, உணவு, உடுக்க உடை, இருக்க இல்லம், படிக்க வசதி, நோயைத் தீர்க்க மருத்துவ உதவி—இந்த ஐந்தும் ஒவ்வொரு மனிதனுக்கும் இருந்துதீரவேண்டிய அடிப்படைத் தேவைகள். இந்த ஐந்து வசதிகளிலே எது ஒன்று குறைந்தாலும் மனிதனின் வாழ்வு முழு வாழ்வாக இருக்க முடியாது. ஆகவேதான் எந்த ஓர் அரசாங்கம், தன்னுடைய ஆட்சியின் கீழ் உள்ள அனைவருக்கும் இந்த ஐந்து வசதிகளையும் தேடித் தருகிறதோ அந்த அரசாங்கத்தைத்தான் நாகரிகமுள்ள அரசாங்கம் என்று நல்லறிவாளர்கள் கருதுகிறார்கள். நாம் கேட்கிறோம்—இந்த ஐந்து வசதிகளையும் ஓர் ஆரம்ப ஆசிரியர் பூர்த்திசெய்துகொள்ள முடியுமா இருபத்தைந்து ரூபாய் சம்பளத்தால்? ஐந்து பேர் உள்ள ஒரு குடும்பத்திற்கு ஒரு மாதத்திற்குத் தேவையான அரிசியை வாங்குவதற்குக்கூடப் பற்றாதே இந்தத் தொகை! இந்த நிலையில் ஒரு குடும்பம் முழுவதும், மாதம் முப்பது நாட்களையும், கேவலம் இருபத்தைந்து வெள்ளிப் பணங்களைக் கொண்டு ஓட்டியாகவேண்டும் என்றால் எப்படி முடியும் அது? முடியும் என்று வங்காளத்து அமைச்சர் ஸ்ரீமான் பன்னாலால் போஸ் கருதுவதாக இருந்தால் அவருக்கு மட்டும் ஏன் மாதச்சம்பளம் ரூபாய் ஆயிரம்? கேட்கமாட்டார்களா ஆரம்ப ஆசிரியர்கள்? கேட்டால் அது குற்றமா? சென்னையில், ஆரம்ப ஆசிரியர்களுக்கு, மாத ஊதியம் ரூபா 110 என்று செய்தி வருகிறதே பத்திரிகைகளில்! அதே நேரத்தில் இங்கே ஓர் அமைச்சர் இப்படிப் பேசினால் ஆரம்ப ஆசிரியர்களின் உள்ளம் எவ்வளவு வேதனைப்படும்? ஏன் எண்ணிப் பார்க்கவில்லை இதை இந்தக் கல்வி அமைச்சர்? இனியாவது இப்படிப்பட்ட பொறுப்பற்ற வாசகங்களை வீசி, குமுறும் எரிமலைகளாக உள்ள ஆரம்ப ஆசிரியர்களின் உள்ளத்தில் வேதனைத் தீயை மூட்ட வேண்டாம் என்று இந்தப் பன்னாலால் போஸ்களை நாம் பணிவன்புடன் வேண்டிக் கொள்ளுகிறோம். விஷம்போல் ஏறிவரும் விலைவாசிகளைத் தங்களுக்குத் தரப்படும் சின்னஞ்சிறு சம்பளத்தைக் கொண்டு சமாளிக்க முடியாமல், ஏற்கெனவே அனலிடைப் புழுக்களெனத் துடித்துக்கொண்டிருக்கின்றனர் ஆரம்ப ஆசிரியர்கள். அவர்களைப் பார்த்து இப்படிப் பட்ட சொற்களைக்கூறுவதுவெந்த புண்ணில் வேலினை நுழைப்பது போன்ற பெருங்கொடுமையாகும் என்பது நம் கருத்து.

ஆம்! அதுதான் சரி!

கோயில்களிலும் மடங்களிலும் ஏராளமாகத் தேங்கிக் கிடக்கும் செல்வத்தில் ஒரு பகுதியை, ஏழை மக்களின் முன்னேற்றத்திற்காகவும் நாட்டின் நல்வாழ்வுக்காகவும் செலவிட வேண்டும் — அப்படிச் செலவிடுவதால் எத்தகைய தவறுமில்லை —அது நம்முடைய ஆஸ்திகதர்மத்திற்கு எந்த வகையிலும் மாறானது ஆகாது என்பது நம்முடைய கருத்து. இந்தக் கருத்தை இப்போது மடாதிபதிகள் கூட மனமுவந்து ஆதரிக்க முன் வந்திருக்கிறார்கள் என்பதைக் காண்கிற போது நாம் மட்டற்ற மகிழ்ச்சி அடையாமல் இருக்க முடியுமா? தருமபுர ஆதீனம் என்பது தமிழ் நாட்டில் உள்ள பழம்பெரும் மடங்களில் ஒன்று. அது செல்வமும் செல்வாக்கும் நிரம்பிய மடம். சைவ மதத்தின் கோட்டை என்று சிவநெறிச் சீலர்களால் செம்மாந்து கூறப்படுகிற இடம். அப்படிப்பட்ட மடத்தின் ஆதீனகர்த்தா சென்ற மாதத்திலிருந்து மடத்தின் செல்வத்தைக் கொண்டு பெரியதோர் அனாதை விடுதி ஒன்றை ஆரம்பித்து நடத்திவருகிறாராம். பத்திரிகைகள் கூறுகின்றன. அருமையான செய்தி! களிப்பூட்டும் சம்பவம்! இப்படிப்பட்ட செய்திகளும், சம்பவங்களும் இனி ஏராளமாக நடைபெறவேண்டும். கோவில்களின் சொத்துக்களும்மடங்களின் செல்வங்களும் ஏழை எளியவர்களின் துயரத்தைத் துடைப்பதற்கான தூய பணியில் தாராளமாகப் பயன்படுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு பெரிய கோயிலும் மடமும் ஒவ்வொரு ஆஸ்பத்திரியையாவது திறக்க வேண்டும். ஒவ்வொரு அனாதை விடுதியையாவது தொடங்க வேண்டும். ஒவ்வொரு பள்ளிக்கூடமாவது நடத்த வேண்டும். தருமபுரத்தார் காட்டிய வழி சரியான வழி. ஏனைய மடாதிபதிகளும் அவரைப்பின்பற்ற வேண்டும். பொதுநல நன்மைக்கான நற்பணி புரியவேண்டும். ஏழை மக்களின் வேதனையைப் போக்குவதைவிட ஆண்டவனுக்கு உகந்த பிரார்த்தனை வேறென்ன இருக்க முடியும்?

பணம் பாழாகும் படலம்?

1947-ம் ஆண்டின் தொடக்கத்தில், இந்தியாவில் துணிப்பஞ்சம் அதிகமாக இருக்கிறது என்று கருதி, இந்திய சர்க்காரின் சார்பில், ஜப்பானிய துணி வகைகள், ஏராளமாக வாங்கப்பட்டனவாம். ஆனால், அப்படி வாங்கப்பட்ட துணிகளில் ஒரே ஒரு கஜம்கூட பொது மக்களுக்கு விநியோகிக்கப்படவில்லையாம். அவ்வளவு துணி வகைகளும் நெடுங்காலம் அப்படியே மூலைகளில் முடங்கும்படி விடப்பட்டுவிட்டு, பின்னர், வாங்கிய விலையை விடக் குறைந்த விலைக்கு, அயல்நாட்டு வியாபாரிகளுக்கு விற்கப்பட்டுவிட்டனவாம். இப்படிச் செய்யப்பட்டதன் விளைவாக இந்திய சர்க்காருக்கு ஏற்பட்டுள்ள நஷ்டம், 55 லட்சம் ரூபாயாம். இந்தியப் பாராளுமன்றத்தின் சார்பில் சர்க்கார் கணக்குகளைப் பரிசீலனை செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவினர் தந்துள்ள திடுக்கிடத்தக்க தகவல் இது. இந்தியசர்க்காரின அலட்சியப் போக்கால் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள நஷ்டம் 55 லட்சம் என்பதை நினைத்துப் பார்க்கும் போது நம் உள்ளம் பதறுகிறது. மிகக் குறைந்த சம்பளம் பெற்று வாடி வதங்கிக் கிடக்கும் ஆரம்ப ஆசிரியர்களின் சம்பளத்தைச் சிறிதேனும் உயர்த்தக் கூடாதா என்று கேட்டால்,எப்படி முடியும்உயர்த்த —பணமில்லையே எங்களிடம் என்கிறது மாகாண சர்க்கார். ஆனால், மத்திய சர்க்காரோ, இரண்டல்ல, ஐம்பத்து ஐந்து லட்சங்களை வீணுக்கு இறைத்திருக்கிறது. இந்தப் பெருந்தொகையை நன்முறையில் பயன்படுத்தியிருந்தால் பொது மக்களின் வாழ்வை வளமாக்கக் கூடிய எத்தனையோ நற்செயல்களைப் புரிந்திருக்கலாம் — ஆனால், இந்திய சர்க்காரோ அலட்சியமாக இருந்திருக்கின்றனர் பண விஷயத்தில்—ஆகவே 55 லட்சத்தை ஒரு காரணமுமின்றி இழந்திருக்கிறது நம்முடைய நாடு. எந்தெந்த அதிகாரிகள் இந்த நஷ்டத்தை உண்டு பண்ணினர் என்பதைக்கண்டறிந்து, அவர்களைச் சரியான முறையில் தண்டிக்க வேண்டும் என்று கூறுகின்றனர் இந்த நஷ்டத்தைக் கண்டறிந்து தெரிவித்த விசாரணைக் குழுவினர். அவர்கள் கூறுவது முற்றிலும் நியாயம். குற்றவாளிகள் உடனடியாக விசாரணைக் கூண்டில் ஏற்றப்படத்தான்வேண்டும். ஆனால் அதுமட்டும் போதாது. இப்படிப்பட்ட பணம் பாழாகும் படலங்கள் இனியாவது நடைபெறாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும் ஆட்சியாளர்கள்.

[ஆரம்பக் கல்வி]

2-ம் பக்கத் தொடர்ச்சி

முதலாளித்துவக் கட்சிகளின், மூலபலம், பணமாகும்.

முன்னேற்றக் கட்சிகளின்,பலம்—அவர்களுக்கு தமது கொள்கை மீதிருக்கும் ஆர்வம்தான்.

பணம்! ஆர்வம்!!—இரண்டும், மோதிக் கொள்ளுகிறது, இது போது.

இதில், பணம், வெற்றி பெறுவது போலக் காட்சியளித்தாலும்; ஆர்வத்தோடு உழைக்கும் கட்சிகளே, மக்கள் மன்றத்தில் செல்வாக்கு பெறுகின்றன.

'பணத்தால்', மக்களிடம் நெருக்கமுடிவதில்லை! 'ஆர்வம்', மக்களோடு, கலந்து விடுகிறது!!

இந்த 'ஆர்வத்தை', மூலபலமாக வைத்துத் தொண்டாற்றும் அரசியல் தொண்டர்கள், இதனால் மக்களிடம் தமக்கேற்படும் தொடர்பை, வலுப்படுத்திக் கொள்ள வேண்டும் —மாலென்கோவ் போல பழக வேண்டும்.

ஆர்வம், மட்டுமிருந்து விட்டால் போதாது. 'ஆகா! என்தாயகம் அடிமையாவதோ? இதை நான் பார்த்துக் கிடப்பதோ?', என்று ஆர்வத்தோடு பேசிடுவதுமட்டும் போதாது —உழைக்கவும் வேண்டும்.

ஆர்வம்! உண்மையானஉழைப்பு!! —இரண்டும் தான், மாலென்கோவை, மனித மாணிக்கமாகச் செய்தது.

இந்த அறிவுரையைத்தான், மாஸ்கோவின் புத்தொளி, உலகிலுள்ள அரசியல் தொண்டர்களுக்கு வழங்குகிறது.

உண்மைச் சேவையால் உலகத் தலைமை பெற்ற, மாலென்கோவ், வாழ்க! வாழ்க!! என வாழ்த்தி, அவரது தலைமையை வரவேற்கிறோம்.

1-ம் பக்க தொடர்ச்சி

அவன் சொத்தைத் தீண்டவும் இல்லை, தீர்ப்பளித்தோர்.

எனவே, மூன்றாண்டுகள் சிறையி லிருந்துவிட்டு, வெளிவருகிறான், க்ரூப், அவன் சொத்து அப்படியே அவனிடம்!! இது அமெரிக்க நியாயம்!!

க்ரூப் நடத்தி வந்த நிலக்கரிச் சுரங்கத் தொழில், இரும்புத் தொழிற்சாலை, ஆகியவைகளை மட்டும், எடுத்துக் கொள்கிறார்கள், நீதிவான்கள்! அதுவும் சும்மா அல்ல! 300 இலட்சம் பவுன் நஷ்டஈடு கொடுத்துவிட்டு!!

க்ரூப், சிறையிலிருந்து வெளி வந்தான் — 300 இலட்சம் பவுன் பணமுடிப்பும் தருகிறார்கள்! கள்ளனுக்குக் கன்னக்கோல் பரிசளிப்பது, இதைவிட விந்தையிலும் சரி, விபரீதத்திலும் சரி, குறைவானது தானே!!

மக்களைக் கொன்று கொன்று குவித்த அலுப்பும், கொள்ளை இலாபத்தைக் குவித்துக் குவித்து ஏற்பட்ட களைப்புமே பாக, ஒரு மூன்றாண்டுக்காலம், அவனுக்கு ஓய்வு!

ஓய்வுக்குப் பிறகு, வெளியே வருகிறான், பணத்தால் அபிஷேகிக்கிறார்கள்!!

மூன்றாண்டுகள் சிறையிலே க்ரூப் இருந்தது, ஓய்வுமட்டுமல்ல, அவனுடைய உயிருக்கும் நல்லபாதுகாப்பு! ஆம்! அந்த அக்ரமக்காரன் வெளியே அப்போது உலவிக்கொண்டிருந்தால், மகனைக் களத்திலே பிணமாகக்கண்ட எந்தத் தகப்பனுடைய துப்பாக்கிக்கேனும் பலியாகிவிட்டிருந்திருக்கக்கூடும்! பொதுமக்களுக்கு, ஜெர்மன் மக்களுக்குக்கூட அந்த அளவு வெறுப்பு தணியவும், ஆபத்து குறையவும் மூன்றாண்டாவது தேவையல்லவா — அதுவரை அமெரிக்க ஆட்சியாளர்கள், க்ரூப்புக்குப் பாதுகாப்பும் ஓய்வும் அளித்து, இப்போது வெளியே கொண்டுவந்து, பெரியதோர் பணமுடிப்பையும் கொடுத்திருக்கிறார்கள்!! எப்படி இருக்கிறது நியாயம்!!

டி. என். ராமன் குடும்பத்துக்கு உதவி

மறைந்த சுயமரியாதை இயக்க வீரர் திருவாரூர் டி. என். ராமன் அவர்களின் குடும்ப நிதிக்காக முரசொலி நாடக மன்றச் சார்பில் தஞ்சை ராமநாதன் செட்டியார் ஹாலில் 21—2—53 அன்று நடைபெற்ற 'பரப்பிரம்மம்' நாடக மூலம் செலவுபோக மிஞ்சிய ரூபாய் இரண்டாயிரமும், குடும்பத்தாருக்கு அளிக்கப்பட்டது.

மேற்படி நாடகத்தில் சிவாஜி கணேசன், மு. கருணாநிதி, அரங்கண்ணல் முதலியோரும்மற்றும் கே. ஆர். ஆர். நடிகக் குழுவினரும் பங்கெடுத்துக் கொண்டனர். கொட்டகை, தாங்க முடியாத அளவுக்கு மக்கள், திரண்டிருந்தார்கள். நாடகமுடிவில் தோழர் கருணாநிதி, ராமனின் தாயார், குழந்தைகளை மேடைக்கு அழைத்து, இந்த நிதியளிப்பதன் நோக்கத்தை விளக்கினார். கல்லூரியில் படிக்கும் இருபுதல்வர்களும், மூன்று சிறுமிகளும் இருக்கிறார்கள். மிஞ்சிய பணத்தைத் தோழர் மு. கருணாநிதி, செங்கற்பட்டில வசிக்கும் ராமனின் துணைவியாரிடம் 24—2—53 அன்று சென்று தோழர்கள் திருவாரூர் ராஜகோபால், திருச்சி திராவிடப் பண்ணை முத்துகிருஷ்ணன், 'திராவிடநாடு' அரங்கண்ணல் ஆகியோர் முன்னிலையில் அளித்து, மேற்படி தொகையைக் கொண்டு குழந்தைகளின் படிப்பைக் கவனித்துக் கொள்ளுமாறு தெரிவித்தார்.

சந்நிதானமும் 'ஈரோடு'ம்!

ஓம் நமசிவாயம்

வருக! வருக!!

நும் வரவு நல்வரவாகுக!

சோதியே! சுடரே!!

மாயப் பிரபஞ்சத்தில் கிடந்துழலும் எமக்கு அருள்பாலித்து, ஞானப்பால் புகட்டும் நீவிர், எழுந்தருளியிருப்பது, எமக்கு எல்லையில்லா இன்பத்தைத் தருகிறது. மூவாசை கடந்த சோதியே! முத்தி ஞானம் பெற்ற சுடரே! உமது, திருக்கரத்தால், திருநீறு பெறும் பாக்யம் தந்தீர் — பரவசமடைகிறோம்.

முற்றும் துறந்த முனிவரே!

மூவாசைகளையும் துறந்து, இறைவனின் பாதாரவிந்தங்களைச் சேர வழிகாட்டும் வள்ளலே! பசி—பிணி—மூப்பு—சாவு நிரம்பிய இந்த லோகத்தில், நாங்கள் பட்டபாடு போதும். படமுடியாதினித் துயரம். பாவிகளுக்கு அருள்பாலிப்பீராக! எம்மைக் கரை சேர்ப்பீராக!!

கவலைவேண்டாம் மகானே!

சாக்கடை—குடிநீர்—பள்ளிக்கூடம்—நகர முன்னேற்றம், இவ்விதம் கூச்சல் போடுகிறார்கள், ஊர் ஜனங்கள். தாங்கள் வரும்போதும், சப்தம் போட்டார்கள். அவர்கள் அஞ்ஞான இருளில் கிடக்கும் ஜனங்கள் தானே! அப்படித்தான், சப்தம் போடுவார்கள். தாங்கள், சித்தம் சோரவேண்டாம். சித்து பெறும் மார்க்கம் சொல்வீராக!

முக்தி காட்டுவீர் முனிபுங்கவா!

எப்படியோ, இந்த நகரத்துக் கவுன்சிலர்களானோம் — நகர சபையின் 'தலைமை'யையும் வாங்கினோம் —எவரும் செய்யமுடியாத காரியத்தைச் செய்துவிட்டோம். நகரசபை மண்டபம் என்றால், ஊர்க் காரியங்களைக் கவனித்துழலும் இடமாகயிருந்தது, தங்கள் வரவால் மாறிவிட்டது. ஈசன் நாமத்தைப் பஜிப்போம்! 'இறைவா! எப்போது எமக்கு முக்தி தருவாய்?' அரகர நமப்பார்வதி பதயே! அரகர மகா தேவா!!

இங்ஙனம்,

ஈரோடு முனிசிபாலிடியார்.

குறிப்பு:—சில கவுன்சிலர்கள், தங்களை வேற்றது பிடிக்காமல், கண்டிக்கிறார்கள். அவர்களோடு சேர்ந்து மக்களும் கண்டிக்கிறார்கள். தாங்கள் பொருட்படுத்தமாட்டீர்களென்று அறிவோம். ஆயினும், மீனாட்சிசுந்தரரின் பார்வைபட்ட தங்கள் மனம் புண்படக்கூடாதென்பதற்காக 'நும் வரவு நல்வரவாகுக' என்பதை பெரிய எழுத்தில் அச்சடித்திருக்கிறோம்.

* * *

ஈரோடு காங்கிரஸ் முனிசிபாலிடியார், திருவண்ணாமலை பண்டாரசந்நிதிக்கு வரவேற்புபசாரம், அளித்திருக்கிறார்கள்.

அந்த வரவேற்புபசாரம் எப்படி எழுதப்பட்டிருந்தது என்கிற விபரம் தெரியவில்லை. எனவே, 'அடியேன்' மனக்கண்ணால் சித்தரித்துப் பார்த்தேன் — அதுதான், மேலேயிருப்பது.

ஆண்டவனோடு இரண்டறக் கலந்து இகலோக இச்சைகளையெல்லாம் துறந்து, பரத்தில் இன்பம் பெற பாதை காட்டுவதே எமது கடன்! என்று மடத்தில் உழலும், பண்டாரசந்நிதியை, இழுத்துவந்து பலத்த போலீஸ் பாதுகாப்போடு, வரவேற்புபசாரம்வழங்கியிருக்கிறார்கள், ஈரோடு காங்கிரஸ் முனிசிபாலிடியினர்.

இத்தகைய 'புதுமை'யான காரியம் செய்யும் ஆசை, அவர்களுக்கு ஏற்பட்டதன் நோக்கம் யாதோ அறியோம் நாம்.

வெளியே, மக்களின் கண்டனம்! ஊரிலோ பரபரப்பு! ஐக்கிய முன்னணி கவுன்சிலர்களின் ஆட்சேபம்! எனவே, போலீஸ் பாதுகாப்பு! இத்தியாதி வைபவங்களுடன் வரவேற்புபசாரம், நடைபெற்றிருக்கிறது.

இத்தகைய 'மாபெரும்' புதுமை செய்யும் ஆசை, ஈரோடு காங்கிரஸ் கவுன்சிலர்களுக்கேற்பட்டதன், நோக்கம்—விளங்கவில்லை. மக்களின் பிரதிநிதிகளாகச் சென்றோர், மக்கள் கண்டித்தாலும் பரவாயில்லை எனும் மனோபாவத்தோடு, வரிப்பணத்தை விரயம் செய்திருக்கிறார்கள்.

மார்க்கபோதனை செய்யும் மகான்களின் 'உபன்யாசங்களை' நடத்தவும்—கேட்கவும் — ஊர்தோறும், கோயில்களிருக்கின்றன. ஈரோட்டிலும், இல்லாமலில்லை! எனினும், நகரசபை மண்டபத்துக்கிருந்த நற்பெயருக்கு, மாசு உண்டாக்கியிருக்கிறார்கள்.

ரஷ்ய சரித்திரத்தில், 'ரஸ்புடீன்' அரசியலில் தலையிட்டதன் விளைவுகளைப்பற்றி அறிந்திருக்கிறோம்.

தமது நகர சபைக் கூடத்தில், பண்டார விஷயங்களைப் புகவிடுகின்றனர். ஈரோடு காங்கிரஸ் கவுன்சிலர்கள்.

ஆளுக்கொரு திருநீற்றுப் பையோ, — நாமப் பெட்டியோ — எடுத்துக்கொண்டு, தம்புருவும் ஜாலராவும் ஏந்திய வண்ணம், வீதிகளிலே வலம் வரட்டும், அவர்கள்! கவனியார், எவரும். ஆனால், ஆட்சி மன்றத்திலா, இவ்வித அநாவசியமான காரியங்களைச் செய்வது?

பண்டாரங்களும், மதவாதிகளும், நகரசபையின் வரவேற்பைப் பெறுவதென்றால், அங்கே 'அரோகரா' சப்தமும், 'திருவடிகளே சரணம்' தானே, கேட்க முடியும்.

பக்திமார்க்கம், இதுபோன்ற 'வரவேற்புகளால்' பரவிடுமென்பதெண்ணமா? 'பகவானைப் பஜிப்பதன்றி வேறொன்றறியேன்! இகலோக இச்சையைத் துறந்தவன். எனக்கேன், ஆடம்பரம் — அந்தஸ்தெல்லாம்? ஐயன் நாமமே கற்கண்டு!'' என்று பஜித்துக் கிடக்க வேண்டிய பண்டார சந்நிதி, காரில் வந்திறங்கி, கூடத்துக்குச் சென்று, வாசித்தளிக்கும் வரவேற்புபசாரத்தைப் பெறுவதென்றால், பக்திமார்க்கம் தழைக்கிறதென்று, பொருள்? பேதையும், கூறான்! கடவுள் மார்க்கம், கரைவதைத்தான் காட்டும்.

உலகத்து இச்சைகளை ஒதுக்கி, உண்மைகளை உரைக்க வேண்டிய, ஒரு பண்டார சன்னதி, நகராட்சி மன்றத்துக்கு வருவதும், பாராட்டுரை பெறுவதும், பதிலளிப்பதுமென்றால், என்ன பொருள்? நந்தி வாகனத்தைத் தூக்கிக்கொண்டு, 'பரமசிவனாரின் பக்கமிருப்பவர் இவர், மகாஜனங்களே! இவருக்கு ஓட்டுப்போடுங்கள். நந்திதேவரைச் சட்டசபைக்கு அனுப்புவோம்' என்று, இவர்கள் புறப்பட்டாலும் வியப்பில்லை. நந்திதேவர்! வைரவ மூர்த்தி! சனிபகவான் வாகனம்! வராகவ மூர்த்தி! கருடன்! —இவைகளையும், அரசியல் மண்டபத்துக்கு, அனுப்பிவைக்கும் 'பக்குவத்துக்கு' அழைத்துச் செல்லப்படுகிறார்கள். பண்டார சந்நதியின் பக்கம் தாங்கிகள். அவ்விதம், அடுத்த தேர்தலின்போது, நடைபெறினும் நடைபெறலாம்! ஆண்டவனைப் பஜிக்கும் ஆதீன கர்த்தர், ஆட்சி மன்றத்தில், உபசாரம் பெறும் அதிசயம் நடக்கும்போது, ஆண்டவனின் வாகனாதிகளும் இனி அழைத்து வரப்படலாம், அரசவைக்கு! பாண்டியனொருவன், அரசவைக்கு மதுரை மீனாட்சிசுந்தரர் பன்றிகளை அழைத்து வந்து, அமைச்சர்களாக அமரவைத்தாராம் —புராணம் கூறுகிறது! அந்தப் புராண மூட்டையில் புகுந்துழலவதில், ஆனந்தம் பெற நினைக்கும் அன்பர் குழாம், ஆச்சரியமிக்க இந்தக் காரியத்தைச் செய்தாலும் செய்யும்!

பண்டார சந்நிதிக்குப் பாராட்டுரையாம்! முற்றும் துறந்தோர்—அரச முற்றம் வருகிறார், ஆனந்தோபசாரம் பெறுகிறார்! திருவண்ணாமலையில் கிடந்தவரை இழுத்து வந்து, பலத்த போலீஸ் பாதுகாப்பு திரட்டி, வரவேற்புபசாரம் அளிக்கிறார்கள். எங்கே, சொல்வது இந்தக் கூத்தை! எட்டிக்குப் போட்டியாகக் காரியம் செய்யவேண்டுமென்றால், இதுபோலத்தானா, செய்யவேண்டும்? ஈரோட்டில், காங்கிரஸ்வாதிகளிலும், கருத்துத் தெளிவு பெற்றோர்—உண்டு. அவர்களுமா, அனுமதித்தனர், இதனை!!

பகுத்தறிவு

பங்குனித் திங்களின் பகுத்தறிவு இதழ் பகுத்தறிவு இயக்க முன்னணியின் முதல் தலைவரான மறைந்த செம்மல் ஊ. பு. அ. சவுந்தரபாண்டியன் அவர்களின் நினைவு இதழாக வருகின்றது என்பதை ஏஜண்டுத் தோழர்களுக்கும். வாசகர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்.

'நிர்வாகி' பகுத்தறிவு அலுவலகம்
சலகண்டபுரம்

திருவாரூர் மாணவர் கழகம்

22—2—53 அன்று திருவாரூர் திராவிட மாணவ முன்னேற்றக் கழக ஆண்டுவிழா, சீரும்சிறப்புடன் நடைபெற்றது. திருவாரூர் கண்டிராத அளவுக்கு, விஜயபுரம் சந்தைப் பேட்டை மைதானத்தில் மக்கள் வெள்ளம் திரண்டிருந்தது.

ஆண்டு விழாவுக்கு 'திராவிட நாடு' துணை ஆசிரியர் தோழர் அரங்கண்ணல் தலைமை தாங்கினார்.

விழாவுக்கு வந்திருந்த கலைஞர் மு. கருணாநிதி, சிவாஜி கணேசன், நடிகமணி எம். ஜி. ராமச்சந்தர், அரங்கண்ணல், ஆகியோருக்கு தி. மு. க. வாலும், மாணவர்களாலும் வரவேற்பிதழ்கள் வாசித்தளிக்கப்பட்டன.

தலைவர் முன்னுரைக்குப்பின் தோழர் என். எஸ். இளங்கோ, மூவலூர் இராமாமிர்தம் அம்மை ஆகியோர் பேசினர். பிறகு தோழர் மு. கருணாநிதி சொற்பொழிவாற்றினார். சிவாஜி கணேசனும், எம். ஜி. ராமச்சந்தரும், சுமார் ஒரு மணி நேரம் மாணவர்கள் பொறுப்பு குறித்தும், பகுத்தறிவியக்கத்தில் தாங்கள் கொண்டிருக்கும் பங்கு குறித்தும், அருமையாகப் பேசினார்கள்.

கடைசியில் மாணவக் கழகச்செயலாளர் சம்பத் நன்றிகூறினார். மாணவமணிகளின் ஆர்வம், பாராட்டக்கூடியதாகும்.

கலைப்படம்

நிர்வாக ஆசிரியர்: வேலன்

பதிப்பாசிரியர்: ஆரி

சிறந்த, திரையுலக, மாத இதழ்

அருமையான ஓவியங்கள்!

கட்டுரைகள்!!

விலை 6 அணா

'கலைப்படம்'

187, மவுண்ட்ரோட், சென்னை.

Edited Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram.